# தகவல் தொடர்பு கோட்பாடு நோக்கில் ஊடகச் செய்திகள்

# Media News Aimed at Communication Theory

**முனைவர் த.சத்தியசீலன்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நவ இந்தியா, கோயம்புத்தூர்.

**Dr T. Sathiyaseelan,** Assistant Professor, Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science (Autonomous), Nava India, Coimbatore

**DOI: 10.5281/zenodo.60749890**

## Abstract

Although modern communication tools such as newspapers and online magazines are structured as database of information, it is possible to make the world aware of the disappearance of communication principles through an in-depth study. This review article seeks to explore and reveal the way the leading Tamil dailies such as Dinamani, Dinamalar, Dinakaran, Dinathanthi, Hindu Tamil Thisai, along with the exclusively online magazines such as BBC Tamil, Asianet News Tamil, One India Tamil, Vinavu and Thandoraa, have been linked to the principles of communication. It is necessary to examine the veracity and speed of the news published in both types of magazines. There is also a need to explore the message through the principles of communication and make it known to the world. Hence, this study has explained the news of two types of magazines in a theoretical way.

**Keywords :** தகவல் தொடர்பு, மக்கள் தொடர்பு, கோட்பாடு, செய்தியின் நோக்கம், நாளிதழ்கள்

நவீன தகவல் தொடர்புச் சாதனங்களான நாளிதழ்கள், இணைய இதழ்களில் செய்திகள் தகவல் தொகுப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகின்றன என்றாலும், அதற்குள் தகவல் தொடர்பு கோட்பாடுகள் மறைந்து காணப்படுவதை, ஆழமான ஆய்வின் மூலம் உலகிற்கு உணர்த்த முடியும்.

இவ்விரு ஊடகங்களில் பணிபுரியும் செய்தியாளர்கள் உள்ளூர், மாவட்டம், மாநிலம், தேசியம் மற்றும் சர்வதேச அளவில் தகவல்களைத் திரட்டி செய்தியாக வெளியிடுவதால், அதை மக்கள் எளிதாக அறிந்து கொள்ள முடிகிறது. அதே நேரத்தில் அரசு, பொதுத்துறை, நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், செய்தி நிறுவனங்கள், சமூக அதிகாரங்களைக் கொண்டிருப்போர் பற்றிய அறிவிப்புகள், பெரும்பாலும் அவர்களுடையே கருத்தே தவிர, செய்தியாளர்களின் கருத்தாக அமைவதில்லை. இவை வருவாய் நோக்கிலும், அதிகாரத்துக்கு அஞ்சியும் வெளியிடப்படுகிறது என்பது மறுப்பதற்கில்லை.

பில் கோவாச் மற்றும் டாம் ரோசன்டைல் ஆகியோர் 'இதழியலின் கூறுகள்' என்ற புத்தகத்தில் இதழியலாளர்களுக்கான முக்கிய வழிகாட்டுதல்களை முன்வைத்துள்ளனர். ஏனெனில் இதழியலின் முதல் விசுவாசம் குடிமக்களுக்கானதாக இருக்க வேண்டும். "இதழியலாளர்கள் என்பவர்கள் உண்மையைக் கட்டாயம் கூற வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களாவர். சக்தி மிக்க

தனி நபர்கள் மற்றும் அரசுகள் அதன் அமைப்புகளை வெளிப்படைத்தன்மையோடும், சுதந்திரமாகவும் கண்காணிக்கும் பொறுப்பும் இதழியலாளர்களுக்கு உள்ளது. தகுந்த ஆதாரங்களை சுட்டிக்காட்டி நம்பகமான தகவல்களைக் குடிமக்களுக்கு செய்தியாக வழங்குவதே இதழியலின் முக்கியச் சாராம்சம்"1 என்கின்றனர்.

இந்நிலையில் தினமணி, தினமலர், தினகரன், தினத்தந்தி, இந்து தமிழ் திசை ஆகிய முன்னணி தமிழ் நாளிதழ்களுடன், இணையத்தில் மட்டுமே வெளிவரும் பி.பி.சி. தமிழ், ஏசியாநெட் நியூஸ் தமிழ், ஒன் இந்தியா தமிழ், வினவு, தண்டோரா ஆகிய இணைய இதழ்களையும் இணைத்துக் கொண்டு இவற்றில் வெளிவந்த செய்திகளைத் தகவல் தொடர்பியல் கோட்பாடுகள் வழி ஆராய்ந்து வெளிப்படுத்த இவ்வாய்வுக் கட்டுரை முற்படுகிறது.

"ஏதேனும் ஒரு துறை பற்றிய ஆய்வுப் பிழிவு கோட்பாடு ஆகும். கோட்பாடு நிலையானது. மாறாதது. நிரூபிக்கக்கூடியது" என்கிறார், வெ.கிருட்டிணமூர்த்தி. (தகவல் தொடர்பியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.323) 2.

ஒவ்வொரு கோட்பாட்டிற்கும் சில அடிப்படை பண்புகள் உள்ளன. அதில் தன் அடிப்படை குணங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தன்னைப் பிறவற்றில் இருந்து வேறுபடுத்திக் காண்பிக்க வேண்டுமே தவிர தன் பண்புகளை கூட்டியோ, குறைத்தோ கூறக்கூடாது. கூற வந்த பொருளைத் தெளிவாக விளக்கிக் கூற வேண்டும்.

தொடர்பியல் பற்றி ஆராய்ந்தவர்கள் சமூக நோக்கில் பல்வேறு கருத்துகளை வழங்கியுள்ளனர். ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தகவல் தொடர்பு சாதனங்கள் குறித்து ஆராய்ந்து கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

**தகவல் தொடர்பியல் கோட்பாடுகள்**

"செய்தி வெளிப்பாட்டில் ஆட்சியாதிக்க கோட்பாடு, மார்க்சிய கோட்பாடு, அரசியல் பொருளாதார தகவல் கருவி கோட்பாடு, சோவியத் பொதுவுடைமைக் கோட்பாடு, பத்திரிகை வலிமை கோட்பாடு, தடையிலாப் பத்திரிகை கோட்பாடு, சமுதாய பொறுப்பு கோட்பாடு, உற்று நோக்கி கோட்பாடு, வலுவூட்டல் கோட்பாடு, வன்முறை நினைவூட்டு கோட்பாடு, உணர்ச்சி செப்பக் கோட்பாடு, உண்மை வெளிபாட்டுக் கோட்பாடு, பிரதிபலிப்பு வெளிபாட்டு கோட்பாடு, சொற்பொருள் ஆய்வு ஒலிபரப்பு கோட்பாடு, செயலறிவுணர்வு கோட்பாடு, தகவல் கோட்பாடு, மக்கள் சமூகக் கோட்பாடு, தனிமனித வேறுபாட்டுக் கோட்பாடு, வாயிற்காவலன் கோட்பாடு, கலைப் பண்பாட்டுக் கோட்பாடு, சமூக உறவுக் கோட்பாடு, சமூகக் கூறுகள் கோட்பாடு, மனநிறைவுக் கோட்பாடு, மக்லூகன் கோட்பாடு, வளரும் தகவல் கருவி கோட்பாடு, குடியரசு பங்கெடுப்புத் தகவல் தொடர்பு கோட்பாடு, பன்னலத்திரள் கோட்பாடு" என தகவல் தொடர்பியல் கோட்பாடுகளை 27 பிரிவுகளாக வகைப்படுத்தி விளக்கியுள்ளார்"3 டாக்டர் வெ.கிருஷ்ணசாமி. (பக்.323-371) இக்கோட்பாடுகளினூடாக மேற்குறிப்பிட்ட தமிழ் நாளிதழ்கள், இணைய இதழ்களில் வெளிவந்த செய்திகள் சிலவற்றைக் கீழ்க்கண்டவாறு காண்போம்.

**ஆட்சியாதிக்கக் கோட்பாடு**

ஆட்சியாதிக்கக் கோட்பாட்டை சைபட் என்பவர் இவ்வுலகிற்கு வழங்கினார். பத்திரிகைகள் உருவானபோது தோன்றிய முதல் கோட்பாடு இதுவாகும். பத்திரிகை தோன்றிய காலத்தில் இருந்து சமூகத்தையும், சமூகத்தில் அதன் பங்கும் இனங்காணப்பட்டது. அக்காலத்தில் முடியாட்சியின் ஆதிக்கத்தின் கீழ் பத்திரிகைகள் இருந்தன. மேலை நாடுகளில் பத்திரிகை சுதந்திரம் அடக்கி வைக்கப்பட்டுள்ளது. இதழியலாளரின் சுதந்திரத்தை பறித்தல், அவர்களது அதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல், அரசு மற்றும் தனியாரின் ஆதிக்கத்திற்கு அடிபணிய வைத்தலை இக்கோட்பாடு விளக்குகிறது.

அரசு வகுக்கும் திட்டங்கள், அறிவிப்புகள் போன்றவை அரசின் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை மூலமாக செய்தி ஊடகங்களுக்கு கொண்டுச் செல்லப்பட்டு, அவற்றில் உள்ளவாறே தகவல்கள் குறிப்பிடப்பட்டு, செய்தியாக வாசகர்களுக்குக்குக் கொண்டுச் செல்லப்படுகின்றன.

இதேபோல் தனியார் நிறுவனங்களிலும் செயல்பட்டு வரும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை மூலமாக செய்தி ஊடகங்களுக்கு செய்திகள் கொண்டுச் செல்லப்படுகின்றன. செய்தியாளர்கள் களத்தில் இறங்கி செய்ய வேண்டிய பணிகளை, இத்துறையின் மக்கள் தொடர்பு அலுவலர்களே செய்து விடுகின்றனர். அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் வாசகர்களுக்குக் கொண்டுச் சேர்க்க நினைப்பதை, இவர்கள் செய்தியாக்கி கொடுப்பது இவர்களது கடமை. இச்செயல்பாட்டை இக்கோட்பாடானது செய்திகள் மூலமாக விளக்குகிறது.

"அரசு பள்ளி மாணவர்களுக்கு புதிய சீருடை"4 (20-05-2019, இந்து தமிழ் திசை ப.7).

"அரசு பள்ளிகளில் புதிய வண்ணத்தில் சீருடைகள்"5 (20-05-2019, பி.பி.சி. தமிழ் நியூஸ்)

மேற்கண்ட செய்திகளில் அரசின் அறிவிப்பை அப்படியே செய்தியாக்கப்பட்டுள்ளன. அரசு வெளியிட நினைத்த செய்தியை, நாளிதழ்களும், இணைய இதழ்களும் வெளியிட்டுள்ளன. மார்க்சியக் கோட்பாடு, ஜெர்மன் பொதுவுடைமைவாதியான காரல் மார்க்சின் கொள்கைகளைக் கொண்டு, சமூக அமைப்புகளையும், தகவல் தொடர்பு கருவிகளையும் கொண்டு ஆராய்வதாகும். தகவல் தொடர்பு கருவிகளையும் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும் எனபதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது.

தகவல் தொடர்பு ஈட்டித் தரும் லாபம், மற்ற வணிகங்கள் மூலம் ஈட்டித் தரும் லாபத்துக்கு இணையானது என்று கூறுகிறது. இக்கோட்பாடு சந்தை நிர்ணயிப்புகளை நடைமுறையில் பரிசோதிக்கக் கூடிய திறனுள்ள அணுகுமுறையை வலியுறுத்துகிறது. இக்கோட்பாட்டின்படி,

"2018-19-ஆம் நிதி ஆண்டில்

மருந்து ஏற்றுமதி 11 சதவீதம் வளர்ச்சி"6 (25-05-2019, ப.8, தினத்தந்தி)

2018-19-ஆம் நிதி ஆண்டில் நாட்டின் மருந்து ஏற்றுமதி 11 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. 1,920 கோடி டாலருக்கு மருந்து ஏற்றுமதியாகி இருக்கிறது. இதற்கு முந்தைய ஆண்டுகளில் 1,730 கோடி டாலர், 1,670 கோடி டாலராக இருந்தது. உலகின் மொத்த மருந்து ஏற்றுமதியில் வட அமெரிக்காவின் பங்கு 30 சதவீதமாக உள்ளது. ஐரோப்பிய ஒன்றியங்களின் பங்கு 19, 16

சதவீதங்களாக இருக்கின்றன" என்ற இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "ஒரு சவரன் ரூ.26,000! மீண்டும் விலை உயருமா? குறையுமா?" 7 (27-06-2019, பிற்பகல் 12.57, ஏசியாநெட் நியூஸ் தமிழ்)

"கிடுகிடுவென உயர்ந்து வந்த தங்கத்தின் விலையில் நேற்று சரிவு காணப்பட்டது. கடந்த சில நாட்களாக ஏறுமுகத்தில் இருந்த தங்கத்தின் விலை மீண்டும் குறையத் தொடங்கியுள்ளது. காலைநேர நிலவரப்படி ஒரு கிராமுக்கு ரூ.3 உயர்ந்து, ரூ.3,250-ஆக உள்ளது. சவரனுக்கு ரூ.24 குறைந்துள்ளது" என்பதை இச்செய்தி விளக்குகிறது.

**தடையிலாப் பத்திரிகைக் கோட்பாடு**

தடையிலாப் பத்திரிகைக் கோட்பாடு, 17-ம் நூற்றாண்டில் பத்திரிகைகள் அரசு அதிகாரக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறத் தொடங்கிய காலத்தில் உருவானது. சான் மில்டன், லாக்கே, ஜெ.எஸ். மில், செபர்சன், சான் எர்சுகின், தாமசு செ.பிர்லான் போன்றோர் இக்கொள்கையின் ஆதரவாளர்கள் ஆவர். தடையின்றி கருத்து பரிமாற்றம் நடைபெறும் போது, உண்மைகள் தாமாகவே வெளிப்படும் என்று இவர்கள் நம்பினர். இக்கோட்பாட்டுடன் ஒத்துப்போகின்றன பின் வரும் சில செய்திகள்.

"அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு தரும் திருக்குறள்
சொற்பொழிவாளர் சுகிசிவம் கருத்து"8 (02-01-2019, ப.7, தினமலர்)

"திருக்குறள் உலகில் உள்ள அனைத்து விஷயங்களுக்கான ஒப்பற்ற நூல். வாழ்வின் துன்பம், சிக்கல் என அனைத்து பிரச்சினைகளுக்கும் திருக்குறளில் தீர்வு உள்ளது. உலகில் உள்ள மத நூல்களைக் காட்டிலும், நம் மரபு நூலான திருக்குறளில், ஆழ்ந்த செய்திகள் உள்ளன. வாழ்வில் ஏற்படும் சச்சரவுகளுக்கு யார் பொறுப்பு? அதை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை வள்ளுவம் உணர்த்துகிறது. எந்தக் காலத்துக்கும் பொருந்தும் கருத்துகளை முப்பாலில் உணர்த்தியுள்ளார், திருவள்ளுவர்.

**சமுதாயப் பொறுப்பு கோட்பாடு**

ஒரு பத்திரிகையானது சமுதாயத்தில் தனக்குள்ள பொறுப்பை உணர்ந்து, அதற்கேற்றாற்போல் நடந்து கொள்வது சமுதாயப் பொறுப்பு கோட்பாடு. இக்கொள்கை அமெரிக்காவில் தோன்றியது. இவற்றுடன் ஒப்பிடத்தக்க சில செய்திகள் பின்வருமாறு.

"பொன்னுயிரைக் கொல்லும் போதைக் காளான்"9 (30-09-2019, ப.4, தினத்தந்தி)

கொடைக்கானல் பகுதியில் விளையும் காளான் வகைகளை ஆய்வுக்கு உட்படுத்தியதில், அவை 'சைலோசைப்" என்ற போதைக் காளான்கள் என்பதை அன்னை தெரசா பல்கலைக்கழகம் கண்டறிந்ததைக், கட்டுரையாக வெளியிட்டு தனது சமுதாயப் பொறுப்பை வெளிப்படுத்தியுள்ளது தினத்தந்தி.

"மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கும் போலி பட்டப்படிப்புச் சான்றிதழ்: யுஜிசிக்கு உத்தரவு "10 (31-08-2019, ஆக. ஒன் இந்தியா தமிழ்.)

நாட்டின் பல்வேறுப் பகுதிகளில் பல்கலைக் கழகங்களிலேயே போலி பட்டப்படிப்பு சான்றிதழ்கள் விற்பனை செய்யப்படுவதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து இதுகுறித்து விசாரிக்க யுஜிசி உத்தரவிட்டுள்ளதை இச்செய்தியில் சமுதாயப் பொறுப்போடு கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தகவல் தொடர்புச் சாதனங்களில் தமிழ் நாளிதழ்கள் வாசகர்கள் மனதில் நிலைத்து விட்ட சூழ்நிலையில், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் தோன்றிய இணைய இதழ்கள், நாளிதழ்களைக் காட்டிலும் செய்திகளை முந்தித் தருவதில் முன்னிலை பெற்று விட்டன. இணைய இதழ்களுக்கு இடையிலான போட்டியில் சில நேரங்களில் அதிகாரப்பூர்வமற்ற தகவல்களைப் பதிவு செய்யப்படுகிறது. இதனால் இவ்வகை இதழ்களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிறது. அதே நேரத்தில் செய்திகளைத் தாமதமாக வெளியிட்டாலும், அதிகாரப்பூர்வ செய்திகளையே பெரும்பாலும் தமிழ் நாளிதழ்களில் காணமுடிகிறது.

இருவகை இதழ்களில் வெளியாகும் செய்திகளின் உண்மைத்தன்மை, விரைவுத்தன்மை போன்றவற்றை ஆராய்வது அவசியமாகிறது. செய்திகளை தகவல் தொடர்பியல் கோட்பாடுகளின் வழி ஆராய்ந்து உலகறியச் செய்யும் தேவையும் ஏற்படுகிறது. அவ்வகையில் இவ்வாய்வு இருவகை இதழ்களின் செய்திகளைக் கோட்பாடுகளின் வழி விளக்கியுள்ளது.

**சான்றாதாரங்கள்:**


1. டாக்டர் வெ.கிருட்டிணசாமி, தகவல் தொடர்பியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. அண்ணாகண்ணன் - தமிழில் இணைய இதழ்கள், அமுதசுரபி பதிப்பகம், ஏ-7, சென்னை-2.
3. அந்தோணி இரா.சு. - இதழியல் ஓர் அறிமுகம், ஆரோக்கியா பதிப்பகம்,திருச்சி, 1986 (மு.ப.).
4. ஆதித்தனார், சி.பா., - இதழாளர் கையேடு,ராணிமுத்து, சென்னை-7, ஜன., 1978 (இ.ப.)
5. ஆண்டோ பீட்டர்,மா.- தமிழும், கணிப்பொறியும், சாஃப்ட்வியூ பப்ளிகேஷன்ஸ், 118, அமைந்தகரை, சென்னை-29.
6. இராசா, கி., - இதழியல்,பார்த்திபன் பதிப்பகம்,மதுரை, ஜூலை 1988 (மு.ப.)
7. கலைவாணி, சோ. - பத்திரிகைகலை, சாரதா வெளியீடு,வேலூர், 1988.
8. குருசாமி, மா.பா. - இதழியல் கலை, வண்ணன் வெளியீடு, சாத்தான்குளம், 1992.
9. குமார், இரா. - நடைமுறை இதழியல்,முல்லையகம் வெளியீடு, ஏ-6, தமிழ்நாடுவீட்டுவசதிவாரியகுடியிருப்பு,208, அண்ணாசாலை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-28.
10. தினமணி.
11. தினத்தந்தி.
12. தினமலர்.

13. இந்து தமிழ் திசை.
14. பி.பி.சி. தமிழ்.
15. ஏசியாநெட் தமிழ் நியூஸ்.
16. ஒன் இந்தியா தமிழ்.

**Reference**


1. Dr.V.Krishnaswamy, Thagaval Thodarbiyal, Manivasagar Padhippagam, Chennai.
2. Dr Annakannan- Thamizhil iniya idhalgal, Amudhasurabhi padhippagam, Chennai-2
3. R.S. Antony, Idhazhiyal Or arimugam, Arogya padhippagam, Trichy.
4. Si.Pa. Adhithanar, Idhazhar kaiyedu, Rani muthu press, Chennai-7
5. M. Anto peter, Tamizhum Kaniporiyum, Soft view Padhippagam, 118, Amaindhakarai, Chennai-29.
6. K. Raja, Idhazhiyal, Parthipan padhippagam, Madurai.
7. S.Kalaivani, Pathirikkai kalai,, Saradha Padhippagam, Vellore.
8. M.P. Gurusamy, Idhazhiyal kalai, Vannan Veliyeedu, Sathankulam.
9. R. Kumar, Nadaimurai Idhazhiyal, Mullaiyagam Veliyeedu, Chennai-28.
10. Dr T Sathiyaseelan, Tamizh News Papers and E-Journals, Thesis, Bharathiar university, Coimbatote-46.
11. Dinamani.
12. Dinathanthi.
13. Dinamalar.
14. Hindu Tamil Thisai.
15. BBC Tamil.
16. Asianet Tamil News.
17. One India Tamil.



**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**த.சத்தியசீலன் "தகவல் தொடர்பு கோட்பாடு நோக்கில் ஊடகச் செய்திகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 1, சனவரி 2022, பக். 15-20

**Cite this Article in English**

**Sathiyaseelan. T " Media News Aimed at Communication Theory"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 1, January 2022, pp. 15-20